

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 22.04.2025


# தன்கர் பேசுவது சட்டபூர்வமானது அல்ல!

தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த வழக்கில் உச்ச நீதிமன்ற அமர்வு வழங்கிய தீர்ப்பு ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க.வை நிலைகுலைய வைத்துள்ளது. அவர்கள் நேரடியாக உச்சநீதிமன்றத்தை விமர்சிக்க முடியாமல், குடியரசுத் துணைத் தலைவர் ஜெகதீப் தன்கரை இறக்கி விட்டுள்ளார்கள்.

“மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க குடியரசுத் தலைவர், மாநில ஆளுநர்களுக்கு உச்ச நீதிமன்றம் காலக்கெடு விதித்திருப்பது கண்டிக்கத்தக்கது. நீதிமன்றங்கள் குடியரசுத் தலைவரை வழிநடத்தும் சூழ்நிலை ஜனநாயகத்தில் இருக்க முடியாது. நீதிமன்றங்கள் குடியரசுத் தலைவருக்கு எந்த ஒரு உத்தரவையும் பிறப்பிக்க முடியாது” என்று பேசி இருக்கிறார் துணை குடியரசுத் தலைவர்.

“குடியரசுத் தலைவருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க முடியாது” என்று எதன் அடிப்படையில் சொல்கிறார் தன்கர்? இப்படிச் சொன்னவர், இப்படிச் சொல்கிறது அரசமைப்புச் சட்டம் என்று சொல்லி இருந்தால், அதனை எடுத்துப் படித்துப்பார்த்து விட்டு தன்கரை பாராட்டலாம். ஆனால், தன்கர் தான் யோசித்ததை எல்லாம் பேசத் தொடங்கி இருக்கிறார்.

**இந்தியாவின் குடியரசுத் தலைவருக்கு யாரும் உத்தரவு போட முடியாது என்று அரசமைப்புச் சட்டத்தில் இருக்கிறதா? இந்தியாவின் குடியரசுத் தலைவருக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட முடியாது என்று அரமைப்புச் சட்டத்தில் இருக்கிறதா? இரண்டுக்கும் பதில், ‘இல்லை’ என்பதுதான். பிறகு எதை வைத்துக் கொண்டு, ‘குடியரசுத் தலைவருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க முடியாது’ என்று சொல்கிறார் தன்கர்?**

குடியரசுத் தலைவர் தனக்கு முன்னால் வரும் சட்ட மசோதாக்களை மூன்று மாதங்களுக்குள் முடிவெடுத்துச் சொல்லவேண்டும் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பார்த்திவாலா, மகாதேவன் அமர்வு சொன்னதில் என்ன குறையைக் கண்டீர்கள்? ‘மூன்று மாதம் என்பது குறைவானது, ஆறு மாதம் வைத்துக் கொள்ளுங்கள்’ என்று கேட்டால் கூட அதில் நியாயம் இருக்கலாம். ஆனால் கால நிர்ணயம் செய்யவே கூடாது என்று சொல்வது என்ன சட்டம்? நியாயம்? நீதி?

இந்திய உச்ச நீதிமன்றத்தின் நீதி விசாரணைக்கு உட்பட்ட அதிகாரங்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விதிகள் 124 முதல் 147இன் கீழ் எழுதப்பட்டுள்ளன. தன்னாட்சி அதிகாரம் கொண்ட அமைப்பு ஆகும். எவரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டாலும் அதில் தலையிடும் உரிமை உச்ச நீதிமன்றத்துக்கு உண்டு. அரசமைப்புச் சட்டப் பிரிவு 131 இன் கீழ், இந்திய அரசுக்கும், மாநிலங்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டால், மாநிலங்களுக்கு இடையில் பிரச்சினை எழுந்தால் அதன் மீது முடிவெடுக்கும் அதிகாரம் தரப்பட்டுள்ளது.

அரசமைப்புச் சட்டத்தை ஆய்வு செய்யும் அதிகாரம், அதனை வரையறுத்தல், விளக்கம் அளித்தல் ஆகியவை உச்ச நீதிமன்றத்துக்கு இருக்கிறது. எந்த உயர்நீதிமன்றத்தின் எந்தத் தீர்ப்புக்கும் மேல்முறையீடு செய்யப்பட்டால் அதனை விசாரிக்கும் அதிகாரம் நீதித்துறைக்கு இருக்கிறது.

குடியரசுத் தலைவர், துணை குடியரசுத் தலைவர் தேர்தலை விசாரிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்துக்கு உள்ளது. பிரிவு 143 இன் கீழ் ஒன்றிய அரசுக்கும், குடியரசுத் தலைவருக்கும் உச்ச நீதிமன்றம் பல்வேறு காலக்கட்டங்களில் அறிவுரைகள், வழிகாட்டுதல்கள் வழங்கி உள்ளது.

அரசமைப்பை பாதுகாக்கும் அதிகாரமும் பொறுப்பும் உச்சநீதிமன்றத்துக்கு இருக்கிறது. அதனால்தான் நீதிபதிகள் பல்வேறு காலக்கட்டங்களில் அரசமைப்பு சட்டத்தின் பக்கத்தில் நின்று கேள்வி கேட்கிறார்கள். நாடாளுமன்றத்திலோ, சட்டமன்றத்திலோ, உயர்நீதி மன்றங்களிலோ சட்ட முரணான தீர்ப்புகள் வழங்கப்பட்டால் அதனை விசாரிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்துக்கு இருக்கிறது. அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப் படாத அதிகாரங்களை நாடாளுமன்றமானது உச்ச நீதிமன்றத்துக்கு வழங்கலாம்.

இந்த வரிசையில் உள்ள முக்கியமான அதிகாரம்தான் பிரிவு 142 ஆகும்.

**“அரசமைப்புச் சட்டம் 142 ஆவது பிரிவின்படி உச்ச நீதிமன்றத்துக்கு அதிகாரம் இருக்கிறது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்களை ஒப்புதல் தரப்பட்டவையாக நாங்கள் அறிக்கிறோம். நீண்ட காலமாக மசோதாவை நிலுவையில் வைத்திருந்த ஆளுநர், அதனை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்ததன் மூலமாக நேர்மையற்ற செயல் செய்துள்ளார். இது போன்று பஞ்சாப் அரசு தாக்கல் செய்த வழக்கில் உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை தந்தது. அன்றைய தினம், குடியரசுத் தலைவருக்கு தமிழ்நாடு ஆளுநர் திருப்பி அனுப்பி இருக்கிறார். எனவே, மசோதாக்கள் மறுபரிசீலனைக்கு எப்போது தமிழ்நாடு அரசால் அனுப்பி வைக்கப்பட்டதோ, அந்த நாளில் இருந்தே அவை ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றன”** என்று உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் ஜே.பி.பார்த்திவாலா, ஆர்.மகாதேவன் அமர்வு தீர்ப்பு அளித்தது.

**“அரசியல் சாசனம் பிரிவு 142 இன் படி முழுமையான நீதியை வழங்குவதற்குத் தேவையான எந்தத் தீர்ப்பையும் அல்லது உத்தரவையும் உச்சநீதிமன்றம் வழங்கலாம்.” என்று உச்ச நீதிமன்றத்தின் அந்த அமர்வு சொன்னது. இது பா.ஜ.க.வின் சதி அரசியலை ஆட்டம் காண வைத்துள்ளது.**

தமிழ்நாடு அரசால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அரசமைப்பு சட்டத்துக்கு தான் உச்ச நீதிமன்றம் பாதுகாப்பு தருகிறது. அதுகூட பொறுக்கவில்லை தன்கருக்கு.

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், “மக்களாட்சியில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் அரசை நடத்த வேண்டும், அலங்கார நியமனப் பதவிகளில் அமர்ந்திருப்பவர்கள் அல்ல. எந்தத் தனிநபரும், அது எத்தகைய உயர் பொறுப்பில் இருப்பவரானாலும் அவர் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும். இதைத்தான் உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது.”** என்று மிகச் சரியாகச் சொல்லி இருக்கிறார்கள்.

ஆளுநர்களும் குடியரசுத் தலைவரும் அமைச்சர்கள் குழுவின் ‘உதவி மற்றும் ஆலோசனை’யின் பேரில்தான் செயல்படுகிறார்கள். செயல்பட வேண்டும் என்பதுதான் இந்திய அரசமைப்புச் சட்டம் ஆகும். **சட்டமன்றங்களால் நிறைவேற்றி அனுப்பப்படும் சட்டத்தை, ஆளுநர்கள் நிறுத்தி வைப்பதைப் போல, நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை குடியரசுத் தலைவர் நிறுத்தி வைத்தால் என்ன ஆகும்? நிறுத்தி வைக்க அனுமதிப்பார்களா ஒன்றிய ஆட்சியாளர்கள்?**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.4.2025) அண்ணா அறிவாலயத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக எம்.ஏ.பேபி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதையொட்டி சந்தித்தபோது, முதலமைச்சர் அவர்கள், அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தார். இந்த நிகழ்வின்போது கழகப் பொருளாளரும், மக்களவை கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், மத்தியக் குழு உறுப்பினர்கள் கே.பாலகிருஷ்ணன், உ.வாசுகி ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.4.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் சந்தித்து, ஈஸ்டர் தின வாழ்த்து தெரிவித்தார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.4.2025) முகாம் அலுவலகத்தில், கழக மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் மருத்துவர் திலீப் ராஜகண்ணப்பன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசு அமலாக்கத்துறை – புலனாய்வு அமைப்புகளை

# காங்கிரஸ் கட்சி மீது ஏவிவிடுவது - ஜனநாயகத்தில் அருவருக்கத்தக்க அரசியல்!

## கழகப் பொருளாளர் – மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அறிக்கை!

**சென்னை, ஏப். 22 -**

**அமலாக்கத்துறை உள்ளிட்ட புலனாய்வு அமைப்புகளைக் காங்கிரஸ் கட்சி மீது ஒன்றிய பா.ஜ.க. அரசு ஏவிவிடுவது ஜனநாயகத்தில் அருவருக்கத்தக்க அரசியல் என்று கழகப் பொருளாளரும், மக்களவைக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் அறிக்கை வருமாறு: -

ஒன்றிய பா.ஜ.க. அரசின் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாக நேஷனல் ஹெரால்டு வழக்கில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களான திருமதி. சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோர் மீது அமலாக்கத்துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளதற்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குஜராத்தில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில்



பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகள் பற்றி நடைபெற்ற கருத்துருவாக்கமும் காங்கிரஸ் தொண்டர்களின் எழுச்சியும் பா.ஜ.க.வை மிரள வைத்திருக்கிறது போலிருக்கிறது.

கடந்த முறை சத்தீஸ்கர் மாநிலத் தலைநகர் ராய்ப்பூரில் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு நடைபெற்ற போது அமலாக்கத்துறை மூலம் அம்மாநில காங்கிரஸ் தலைவர்களின் வீடுகளில் ரெய்டு நடத்தியது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

இப்போது குஜராத் எழுச்சிக்குப் பிறகு, அதே பாணி அரசியலை கையிலெடுத்து காங்கிரஸ் அகில இந்திய தலைவர்கள் மீது குற்றப்ப த்திரிகையைத் தாக்கல் செய்துள்ளது. வஃக்பு திருத்தச் சட்ட மசோதாவுக்கு எதிராகக் காங்கிரஸ் உறுதியாக நின்று எதிர்கட்சிகளை ஒருங்கிணைத்து வாக்களிக்க வைத்துள்ளதும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வயிற்றில் புளியைக் கரைக்கிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத திட்டங்களை தோல்விகளை மக்களிடம் எடுத்துச் செல்கின்ற காங்கிரஸ் கட்சியைப் பார்த்து பா.ஜ.க. மிரட்சியில் இருக்கிறது.

அதனால்தான் அமலாக்கத்துறை காங்கிரஸ் கட்சியைச் சுற்றிச் சுற்றியே வந்து கொண்டிருக்கிறது. இப்போது அதன் தலைவர் களான திருமதி. சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி ஆகியோரையும் விட்டு வைக்கவில்லை!

காங்கிரஸ் போன்ற பிரதான எதிர் கட்சியை அரசியல் ரீதியாக எதிர் கொள்ளத் துணிச்சலற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசு, இப்படி அமலாக்கத் துறை உள்ளிட்ட புலனாய்வு அமைப்புகளைக் காங்கிரஸ் கட்சி மீது ஏவிவிடுவது ஜனநாயகத்தில் அருவருக்கத்தக்க அரசியல் மட்டுமல்ல! யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாத வெட்கி தலைகுனிய வேண்டிய அரசியல் பழிவாங்கும் செயலாகும்!

ஆட்சிக்கு வந்ததில் இருந்து அமலாக்கத்துறையைத் தனது கூட்டணிக் கட்சியாகச் சேர்த்துக் கொண்டு இப்படி பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒன்றிய அரசு இனிமேலாவது காங்கிரஸ் கட்சியை மட்டுமல்ல எதிர்கட்சிகளை அரசியல் ரீதியாகவே சந்திக்கும் துணிச்சலைப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

### அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி சந்தர்ப்பவாத கூட்டணி!

# நாட்டில் ஜனநாயக உரிமைகளை சீர்குலைத்து வருகிறது மோடி அரசு!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை – மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி சந்தித்த பின் பேட்டி!

சென்னை, ஏப். 22 –

அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி சந்தர்ப்பவாத கூட்டணி என்றும் நாட்டில் ஜனநாயக உரிமைகளை மோடி தலைமையிலான அரசு சீர்குலைத்து வருகிறது என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்த பின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில் குறிப்பிட்டார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி நேற்று முன்தினம் (20.4.2025) அண்ணா அறிவாலயத்தில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்த பிறகு, பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:–

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்கள் மிகப் பெரிய ஆதரவை அளித்து வருகிறார்கள்.

மதுரையில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது மாநில மாநாடு மக்களின் ஆதரவோடு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடனான சந்திப்பின் போது, மதவாத சக்திகளுக்கு கடும் பதிலடி கொடுக்க ஜனநாயக மதச்சார்பற்ற, முற்போக்கு அரசியல் சக்திகளின் தலைமையில் தமிழ்நாட்டு மக்களை ஒருங்கிணைத்துள்ளது குறித்தும், அதை வலுவாக கட்டியெழுப்புவதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்களிப்பு குறித்து பேசினோம்.

தற்போது, பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. கட்சிகள் சந்தர்ப்பவாத கூட்டணியை அமைத்துள்ளது.

பாசிச அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.இன் வழிகாட்டுதலின்படி, பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் தலைமையிலான அரசு நாட்டில் மதச்சார்பின்மை, சிறுபான்மையினர் உரிமை, ஜனநாயக உரிமைகளை



திட்டமிட்டு சீர்குலைத்துவருவதை நாம் பார்த்து வருகிறோம்.

வக்ஃப் திருத்த மசோதாவை, நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியது, சிறுபான்மையினர் உரிமைகள் எவ்வாறு தாக்கப்படுகின்றன என்பதற்கு சமீபத்திய உதாரணம் ஆகும்.

நாடாளுமன்றத்தில் இந்த வக்ஃப் மசோதாவுக்கு எதிராக அ.தி.மு.க. வாக்களித்தது.

அதே நேரத்தில், அவர்கள் பா.ஜ.க.வுடன் சேர்ந்தது சிறுபான்மையினருக்கு எதிரானதாகும்.

இப்போது உச்ச நீதிமன்றம் இந்த வக்ஃப் சட்டத்தைப் பற்றி, கடுமையான விமர்சனங்களை வைத்துள்ளது.

வக்ஃப் சட்டத்தின் பல விதிகள் சிறுபான்மையினருக்கு அரசியல் சாசன உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளதற்கு எதிராக உள்ளது என உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

அதேபோல், மாண்பமை உச்சநீதிமன்றம், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக தீர்ப்பினை சட்டப் போராட்டத்தின் மூலம் பெற்று தந்த முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துகள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு, மாநில அரசுகளின் உரிமைகள் குறித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, மிக முக்கியமான வரலாற்று சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றிருக்கிறது.

எனவே, நாங்கள் நட்பு ரீதியாக விவாதித்தோம். மேலும், ஒரு வருடத்திற்குள் சட்டமன்றத் தேர்தல் வரும் நிலையில் தமிழ்நாட்டில் முற்போக்கு மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகள் இணைந்து தேர்தலை எதிர்கொள்வது என்றும் முடிவெடுத்துள்ளோம்.

மேலும், இந்த அணி ஒட்டுமொத்த நாட்டிற்கே ஒரு முன்மாதிரியாக இருக்கும். இதில் பலரும் சேர்ந்து மேலும் பலமாக இருக்கும்.

பா.ஜ.க.வுக்கும், அ.தி.மு.க.வுக்கும் இடையே சந்தர்ப்பவாத கூட்டணி ஏற்பட்டுள்ளதால், மக்கள் தி.மு.க. தலைமையிலான அணிக்கு மேலும், வலு சேர்ப்பார்கள் என்று நம்புகிறோம்.

இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி பேட்டியளித்தார்.